திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இரண்டு நாளில் ஒரு அடிக்குமேல் வந்துவிடுகிறது. எனவே அதற்குக் கூலி கொடுத்துக் கட்டாது. ஒன்றைச் செய்யுங்கள், சீரியல் பயிற்சி வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், இதை கம்ப்ளிட்டாக 'எராடிகேஷன்' செய்துவிட்டால் மற்ற இடங்களுக்குப் பரவாது. வெள்ளாமை வராவிட்டாலும் போகட்டும், இதை யாவது செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, இந்த மருந்து இரண்டு நாட்களுக்கு ஒரு முறை அடிக்க வேண்டிய மருந்து என்று சொன்னார்கள். எங்கிருந்து அதைக் கண்டு பிடித்தார்களோ தெரியவில்லை. ஏனென்றால், நான் எழுதிக் கொடுத்திருப்பதில் கடைசி பாராவில் இருக்கிறது, இந்த மருந்தை நான்கு மாத இடைவெளியில், நான்கு மாதங்களுக்கு ஒரு முறையே அடித்தால் போதும் என்று. அதைச் செய்தால் வேரோடு களையை அகற்ற முடியும் இந்த மருந்தால் என்று வேளாண்மைத் துறை நம்புகிறது. ஆனால் இன்னும் சோதனை முடியவில்லை என்ற கட்டத்தில், நான் சொல்வதெல்லாம், அது உயரமாக வளர்வதற்கு முன்னால், 10 அடி நீளத்திற்கு வேர் விடுவதற்கு முன்னால் களையைக் கிள்ளிவிடுவதால் இலகுவாக அகற்ற முடியும். அந்த முறையில் செய்தால் விவசாயிகள் இந்தக் களையைக் களைந்து இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும்.

5. அரசினர் தீர்மானம்

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பேரவை விதி 21 (3)-ன் கீழ், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

" நிகழ்ச்சி நிரலில் உள்ள (பிற்பகல் 4 மணிக்கு நடைபெறுவதாகவுள்ள) இனம் 4-பேரவைத் துணைத் தலைவர் தேர்தலை, இனம் 1-க்கு அடுத்து எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.